1982 பிப்ரவரி 17]

[முற்பகல் 10.20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களாகப் பதிவு செய்து கொண்டு அந்தச் சங்கங்கள் முன்வந்தால், அவைகளுக்கு முன்னுரிமை அளிக்க அரசு யோசிக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலே சுண்ணாம்புக்கல் தனியாக எடுக்கப்பட்டு, அதில் இருந்து ஏராளமான கனிம்புப் பொருள்கள் விரயமாவது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் உடனடியாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அவைகளை முறைப்படி குத்தகைக்கு விட, அவைகளை ஒழுங்குபடுத்தி அரசு நக்வடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, கேள்வி கல்குவாரியைப் பற்றியது. இருந்தாலும், லைம்ஸ்டோன்களைப் பொறுத்தவரையில், மூன்று வகையாக எடுக்கிறார்கள். ஒன்று பெரிய தொழிற்சாலைகளுக்கு எடுத்து அவர்கள் உபயோகிக்கிறார்கள். அடுத்து சிறிய தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் சென்று அவர்களும் உபயோகிக்கிறார்கள். மூன்றாவதாக தனிய கள் சிலர் குறைந்த அளவு எடுத்து வியாபாரம் செய்கின்றார்கள். இதிலே ஊராட்சி ஒன்றியங்கள் செய்வதற்கு எதுவுமில்லை அப்படி தேவை என்றால், அவர்கள் விண்ணப்பித்து, பொது ஏலத்திலும் பங்கு கொண்டு எடுக்கலாம், அல்லது சொசைட்டிகளின் மூலமாகவும் எடுக்கலாம். அந்த நிலை வரும்போது அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பத்தூரில் அரிசன மாணவிகள் இல்லம்
கட்டும் திட்டம்

* வினா எண் 240.—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் அரிசன மாணவிகள் இல்லம் புதியதாகக் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் உடன் கட்டுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் ஐம்பது பேர் தங்கும் ஆதிதிராவிட மாணவிகள் இல்லம் ஒன்று இயங்கி வருகிறது. இதற்காக புதிய கட்டிடம் இதுவரைக் கட்டப்படவில்லை. இதற்கான கருத்துக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) நிதி நிலையைப் பொறுத்து வரும் ஆண்டுகளில் இவ்வில்லத்திற்கு புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அரிசன மாணவிகள் இல்லம் என்று இருந்தாலும் பல மதத்தினரும் அங்கே படிக்கின்றார்கள், நீண்ட நாட்களாக வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்ற அந்த இல்லம் மிகவும் பழுதடைந்து இருக்கின்றது, ஆபத்தான நிலையில் இருக்கின்றது. அந்த ஏழை மாணவிகளைக் காப்பாற்றும் வகையில் உடனடியாக புதிய கட்டிடத்தைக் கட்ட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, மாணவிகளின் இல்லங்களைப் புதிதாகக் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, இருக்கின்ற அடிப்படை வசதியை உணர்ந்து அந்த மாணவிகளுக்கு வசதிகள் செய்து தரவேண்டும் என்ற எண்ணத்தோடு, தமிழக அரசும் மத்திய அரசும் ஒரு ஆண்டுக்கு 50 இல்லங்கள் கட்டுவதென்று முடிவெடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வருகிற நிதி ஆண்டிலே 50 மாணவியர் இல்லங்களைப் புதிதாக கட்டப்பட இருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து நிச்சயமாக பரிசீலிக் ப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்த விடுதிகள் கட்டும்போது, சீல்டு டெண்டர் முறைலேதான் ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் ஒரே நபர் டெண்டர் போட்டால் அரசு அதை நிராகரிக்கிறது. ஆனால் ஒப்பந்தக்காரர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு ஆளுக்கு ஒரு வேலை என்று பகிர்ந்து கொள்கிறார்கள். அப்படி டெண்டர் போடுவதும் அரசு தள்ளுபடி செய்வதுமாக 2, 3 ஆண்டுகளுக்கு அந்தக் கட்டிடங்கள் கட்டமுடியாமல் இருக்கின்றது. இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடத்தைக் கட்ட வேண்டும் என்று சென்ற ஆண்டிலேயே அமைச்சரிடம் நேரடியாக மனு கொடுத்தேன். அவரும் கட்டுவதாகச் சொன்னார். அங்கே இருக்கின்ற கட்டிடம் பாழடைந்த கட்டிடமாக இருக்கின்ற காரணத்தால், அந்தக் கட்டிடத்தின் சொந்தக்காரர்கள் அதை உடனடியாகக் காலி செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் வேறு இடம் தேர்வு செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். எனவே, நடப்பு ஆண்டிலாவது இந்தக் கட்டடத்தை நிச்சயமாக கட்டித்தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கக் கூடிய கருத்தின் அடிப்படையில்தான் பதில் அளித்திருக்கிறேன். வருகின்ற நடப்பு ஆண்டில் இதை அரசு பரிசீலனை செய்யும்.

வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி இறக்கும் கட்டிடத் தொழிலாளர் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்கும் திட்டம்.

குறுகிய கால வினா எண் 1: *திரு. இரா. தாமரைக்கனி: திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டிடம் கட்டும் தொழிலாளி வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி மாண்டால் அவருடைய குடும்பத்திற்கு ரூபாய் 10,000 வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு சட்டம் இயற்ற காலதாமதம் ஆவதால் தமிழக அரசின் நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்திருக்கும் 'கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம்' இயற்றுவதில் காலதாமதம் ஏற்படக் கூடுமாதலால், மாநில அளவில் இவர்களுக்கென ஒரு சட்டத்தினை மேற்கொள்ள இவ்வரசு தீர்மானித்துள்ளது. சட்டம் விரைவில் கொண்டு வரப்படும். கட்டிடம் கட்டும் தொழிலாளி வேலை நேரத்தில் விபத்துக் குள்ளாகி மாண்டால் அவர் குடும்பத்திற்குத் தகுந்த இழப்பீடு வழங்க இச்சட்டத்தில் வழிவகை செய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தமிழக அரசு இந்தக் சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு மிக்க நன்றி. அந்தச் சட்டம் வருவதில் காலதாமதம் ஆவதைத் தடுக்க இந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த மத்திய அரசு மாநில அரசுக்கு ஏதாவது ஆலோசனை கூறியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சட்டம் டிராப்ட் பில்— மாநில அரசுக்கு அனுப்பப்பட்டது. அதற்கு வேண்டிய ஆலோசனையை இந்த அரசு அனுப்பியிருக்கிறது. நாம் உடனே கொண்டு வருவோம் என்று சொல்லவில்லை. மத்திய அரசு கொண்டு வருவதில் தாமதம் ஏற்படுமானால், மாநில அரசு